பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 07 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தீவிரவாதிகளுக்கு எதிராக தடை விதிப்பதில் உலக நாடுகள் எவ்வித தயக்கமும் காட்டக்கூடாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

- சுயசார்பு இந்தியா இயக்கம் காரணமாக நாடு தற்போது பாதுகாப்பு தளவாடங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு முன்னேறி உள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.

- ஈரான் நாட்டில் சிக்கித் தவித்த தமிழக மீனவர்கள் 15 பேர் இன்று அதிகாலை சென்னை வந்தனர்.

- இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 336 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

தீவிரவாதிகளுக்கு எதிராக தடை விதிப்பதில் உலக நாடுகள் எவ்வித தயக்கமும் காட்டக்கூடாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான அமர்வில் உரையாற்றிய அவர், தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களையும், தீவிரவாதத்திற்கு ஆதரவாக செயல்படுவோரையும் சமமாக கருத முடியாது என்றார்.

தீவிரவாதம் மனித குலத்திற்கு பெரும் சவாலாக உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்ட அவர், பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல், இந்தியாவின் ஆன்மா, அடையாளம் மற்றும் கண்ணியத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்றும் தெரிவித்தார்.

தீவிரவாதத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரிக்கும் எந்தவொரு நாடும் அதன் விளைவை சந்திக்க நேரிடும் என்று கூறிய அவர், தீவிரவாத செயல்களை கண்டிப்பது தலையாய கடமையாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சூழ்நிலைகள் எவ்வளவு கடினமாக இருந்தாலும், மனிதகுல நலனுக்கு, அமைதி ஒன்றே சரியான பாதை என்பதில் இந்தியா உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

போரும், வன்முறையும் தேவையில்லை என்றும், முன்னேற்றத்திற்கு அமைதியும், பாதுகாப்பான சூழலுமே அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் பிரிக்ஸ் அமைப்புக்கு மிக முக்கிய பங்கு இருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

மாநாட்டின் இடையே பிரதமர் திரு. நரேந்திர மோடி, கியூபா அதிபர் திரு. Miguel Diaz, மலேசிய பிரதமர் திரு. அன்வர் இப்ராஹிம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் இடையே பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு. செர்ஜி லாவ்ரோவ் உடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது மேற்காசிய விவகாரங்கள், பிரிக்ஸ் மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் செயல்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக திரு. ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று ஈரான், மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடனும் திரு. ஜெய்சங்கர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

<<<<>>>>

ஆங்கிலேயர்களை எதிர்த்து நாட்டில் முதல் முறையாக சுதேசி கப்பல் நிறுவனம் தொடங்கி அதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர் சுதந்திரப் போரட்ட வீரர் வ.உ. சிதம்பரனார் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று வ.உ.சி.-யின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் பேசிய அவர், தமிழ் இலக்கியங்கள் மீதும், மொழியின் மீதும் அதிக ஈடுபாடு கொண்டிருந்த வ.உ.சி, தேச நலனுக்காக சிறைவாசம் அனுபவித்தவர் என்றார்.

அவரது வழியில் நாடு தற்போது சுயசார்பு நிலையை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களின் காரணமாக சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் இந்த ஆண்டு ஒரு லட்சத்து 10 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்துள்ளதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

திருச்சியில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் பேசிய அவர், முன்பு வறுமையின் அடையாளமாக இருந்த அரசுப் பள்ளிகள் தற்போது பெருமையின் அடையாளமாக திகழ்வதாக தெரிவித்தார்.

ஆரம்ப பள்ளியில் கற்றுத்தரும் படிப்புதான் மாணவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் என்றும் திரு. கே.என். நேரு தெரிவித்தார்.

<<<<>>>>

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் அருள்மி சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு விழா வெகுவிமரிசையாக நடைபெற்று வருகிறது.

இக்கோவிலில் 300 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் முடிவடைந்து தற்போது நடைபெற்று வரும் குடமுழுக்கு விழாவில் தமிழகம் மட்டுமின்றி உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் வந்துள்ள முருக பக்தர்கள் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஈரான் நாட்டில் சிக்கித் தவித்த தமிழக மீனவர்கள் 15 பேர் இன்று அதிகாலை சென்னை வந்தனர்.

அந்நாட்டில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வந்த இவர்கள், ஈரான் - இஸ்ரேல் இடையேயான தாக்குதல் காரணமாக கடந்த 2 மாதமாக தொழிலுக்கு செல்ல முடியாமல் தவித்து வந்த நிலையில், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக தற்போது சென்னை அழைத்து வரப்பட்டனர்.

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த இந்த மீனவர்களை பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

தென்னமெரிக்க நாடான சூரிநாமில் முதல் பெண் அதிபராக திருமதி Jennifer Simons தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

-----------

காஸா போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதி முயற்சிகள் இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

-----------

ராணுவத்தின் பஞ்சாப் ரெஜிமெண்ட் படைப்பிரிவு சார்பில் ஜம்மு-கஷ்மீரின் மெந்தார் பகுதியில் முன்னாள் படை வீரர்களின் பேரணி நடைபெற்றது.

-----------

மும்பை விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் சுமார் 11 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்கள், தங்கம் மற்றும் அரிய உயிரினங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

-----------

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள ரேலியா வனப்பகுதியில் துப்பாக்கியுடன் சுற்றித் திரிந்த கர்நாடகாவைச் சேர்ந்த ஒரு பெண் உட்பட 5 பேரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

-----------

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் நடைபெற்ற பாரம்பரிய சிறுதானிய விதைத் திருவிழாவில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

-----------

ஆஷாட ஏகாதசியை முன்னிட்டு கரூர் அருள்மிகு பண்டரிநாதர் சுவாமி கோவிலில் பக்தர்கள் உதிரிப் பூக்களால் அர்ச்சனை செய்து வழிபட்டனர்.

-----------

சென்னை மாநகரில் மக்கள் குறைதீர்ப்புக்கான சிறப்பு முகாம்களில் பங்கேற்பதற்கான விண்ணப்பங்கள் வினியோகம் இன்று தொடங்கும் என்று மாநகராட்சி தெரிவித்துள்ளது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்துக்கு எதிரன இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 336 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

பர்மிங்ஹாமில் நடைபெற்ற போட்டியின் கடைசி நாளான நேற்று மழை காரணமாக தாமதமாக போட்டி தொடங்கிய நிலையில் 608 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி, அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து 271 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து ஆகாஷ் தீப் 10 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

430 ரன் குவித்த கேப்டன் ஷுப்மன் கில் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார்.

-------------

உலகக் கோப்பை குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியா மேலும் 2 தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

<<<<The End>>>>